செ.வெ.எண்:34 நாள்:19.12.2017

# நாகூர் தர்கா கந்தூரி பெருவிழாவை முன்னிட்டு முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

நாகப்பட்டினம் மாவட்டத்தில் புகழ்பெற்ற நாகூர் தர்கா கந்தூரிவிழா வரும் 17.02.2018 அன்று தொடங்கி 02.03.2018 வரை நடைபெற உள்ளது. விழாவின் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்ததாவது, "புகழ்பெற்ற நாகூர் தர்கா கந்தூரிவிழாவின் போது நகராட்சி, வருவாய்துறை, காவல்துறை, சுகாதாரத்துறை, தமிழ்நாடு மின்சாரவாரியம், குடிநீர் வடிகால் வாரியம், உணவு பாதுகாப்பு அலுவலர், நெடுஞ்சாலைத்துறை ஆகிய துறைகள் இணைந்து அனைத்து முன்னேற்பாட்டு பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்..

நாகூர் புதிய பேருந்து நிலையம் மற்றும் தர்காவை சுற்றியுள்ள ஆக்ரமிப்புகள் மற்றும் சந்தன கூடு சுற்றும் வீதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும். பொதுசுகாதாரத்துறையின் மூலம் சிறப்பு மருத்துவமுகாம்கள் அமைத்திடவும், தர்கா அலுவலகத்தில் காவல்துறையினரின் கட்டுப்பாட்டு கண்காணிப்பு மையம் அமைக்கப்பட வேண்டும். யாத்ரிகர்கள் புனித நீராடும் தர்கா குளத்தினையும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

நகராட்சி சார்பில் பராமரிக்கப்படும் கழிவறைகளை சுத்தம் செய்து யாத்ரிகர்கள் பயன்படுத்தும் வகையில் அவை தொடர்ந்து பராமரிக்க வேண்டும். சுகாதாரம் பேண நோய் தொற்றினை தடுக்க உடனுக்குடன் குப்பைகளை அகற்றிட வேண்டும் எனவும், பக்தர்களுக்கு தேவையான குழநீர் வசதி செய்து தரவும் துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வ.முருகேசன், வருவாய் கோட்டாட்சியர் திரு.ம.கண்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திரு.சு.ராமன், நாகூர் தர்கா இடைக்கால நிர்வாகிகள் திரு.கே.அலாவூதீன்,இ.ஆ.ப(ஓய்வு), திரு.எஸ்.எப்.அக்பர்(மாவட்ட நீதிபதி ஓய்வு), மற்றும் அரசு அலுவலர்கள், காவல்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.